# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2094/6 - 2018 ඔක්තෝබර් මස 22 වැනි සඳුදා - 2018.10.22

*2094/6 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 22 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: DHO/LAN/ACQTN/A1/2/57
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின்
கோவை இல.: 4-3/2/2016/VE/267.

பொது மக்கள் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

சப்பிரகமுவ மாகாணத்தின், கேகாலை மாவட்டத்தில், தெஹிஓவிட்ட பிரதேச செயலாளர் பிரிவில், அட்டுலுகம் கோரளை மேற்கு சிறு பிரிவில், இலக்கம் 116 C கனங்கம கிராம அலுவலர் பிரிவில், அட்டுலுகம கிராமத்தில் அமைந்துள்ள ஆரம்ப வரைபட இலக்கம் கே/3559 மற்றும் 2018.06.20ஆந் திகதிய வரைபடத்தில் துண்டு இலக்கம் 01 தொடக்கம் 02 வரையில் (02 துண்டுகளுக்கான) எல்லைகள்.

1. **துண்டு இல.** 01

காணியின் பெயர்: குறிப்பிடப்படவில்லை; விபரம்: வீதி; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: களனி வெளி பெருந்தோட்டக் கம்பனி, இலக்கம் 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10; விஸ்தீரணம்: 0.0513 ஹெக்டயார்.

2. **துண்டு இல.** 02

காணியின் பெயர்: தேவாலகந்த தோட்டம், அக்கரமலய பிரிவு; விபரம்: பெருந்தோட்டம், 15 - 20 வயதையுடைய இறப்பர் பயிர்ச் செய்கை; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: களனி வெளி பெருந்தோட்டக் கம்பனி, இலக்கம் 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10; விஸ்தீரணம்: 1.7049 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 27 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு தெஹிஓவிட்ட பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத்தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 13 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

யூ. பீ. சந்தன அனுருத்த பியதாஸ,
பிரதேச செயலாளர்,
தெஹிஓவிட்ட.

பிரதேச செயலகம்,
தெஹிஓவிட்ட.
2018, ஒற்றோபர் 17.

*11 - 316*